DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -7

| | | |
|---|---|---|
| Name | : ரித்திஸ்குமார் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 8th day of April 2025

Accused present.

**முதல் விசாரணை :–**

நான் தென்அழகாபுரம் அம்பேத்கர் காலனியில் குடியிருக்கிறேன். நான் பர்ச்னிச்சர்கடையின் குடோனில் மேனேஜராக பணிபுரிகிறேன். இறந்துபோன செல்வகுமாரை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் குடியிருந்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தான் செல்வகுமாரை அடித்துவிட்டார். கடந்த 23.12.2017 அன்று சாரதாகாலேஜ் ரோட்டில் நின்றுகொண்டிருந்தோம். ஆஜர் எதிரியும், அவரது மனைவியும் சண்டை போட்டு கொண்டீருந்தார்கள். எதிரியும் அவரது மனைவியும் ரோட்டிற்கு எதிர்புறம் சண்டை போட்டுகொண்டீருந்தார்கள். செல்வகுமார் தடுப்பதற்காக சென்றார்.

நீ எதுக்குடா வந்து கேட்கிறாய் என்று சொல்லி எதிரி செல்வகுமாரை கட்டையால் தலையில் அடித்துவிட்டார். கூட்டம் கூடிவிட்டது. பரமேஸ்வரன் வந்திருந்தார். தமிழின் மனைவி வந்திருந்தார். சதீஸ் என்பவர் வந்திருந்தார். மற்றும் பொதுமக்கள் இருந்தார்கள். பின்னர் செல்வகுமாரை ஆட்டோவில் வைத்து சென்று விட்டார்கள். எதிரி கூட்டமாக இருந்ததால் பதற்றத்தில் கட்டையை தூக்கி கொண்டு

ஓடிவிட்டார். புதுவருடத்தன்று செல்வகுமார் இறந்துவிட்டார் என்று எனக்கு தெரியவந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன செல்வகுமார் எனது பக்கத்துவீட்டுகாரர். இறந்துபோன செல்வகுமாரை விவரம் தெரிந்ததிலிருந்து எனக்கு தெரியும். செல்வகுமாரும், அவருடைய மனைவியும் தகராறு செய்துகொண்டாதால் அவருடைய மனைவி சென்னையில் வசித்தார் என்றால் அது எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது நாங்கள் ரோட்டிலிருந்து பேசிகொண்டிருந்ததோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். நான் அவ்வாறு போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 400, 500 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்தபோது செல்வகுமாரின் ஆட்டோ ஸ்டேண்டில் இருந்தது என்றால் சரிதான்.

ஆ்ட்டோ ஸ்டேண்டிற்சகும்,, செல்வகுமார் வீட்டிற்கும் சுமார் 30, 20 மீட்டர் தூரம் இருக்கும். செல்வகுமார் வீடு சிமெண்ட் அட்டைவீடு. மாடி வீடு வீட்டிற்கு மேல் சிமெண்ட் அட்டை போட்டுள்ளார்கள். அவரது வீடு மெயின்ரோட்டிலிருந்து வ்டக்கிலிருந்து தெற்காக சென்று பின்னிட்டு கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் சாலையில் உள்ளது என்றால் சரிதான்.

சம்பவம் நடந்தவுடன் கூட்டம் கூடியது என்றால் சரிதான். சம்பவம் நடுரோட்டில் நடந்தது என்றால் சரிதான். பொதுமக்கள் கூடியஉடன் போலிசர் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலிசார் நடுரோட்டில் சண்டைபோட்டடதால் எதிரியின் மனைவியை காவல்நிலையம் வரச்சொன்னார்கள் என்றால் சரிதாதன். அ்க்கம்பக்கம் உள்ளவர்களிடம் போலிசார் என்ன நடந்தது என்று விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எதிரி மனநலம் பாதிக்கப்பட்டு தானாக பேசிகொண்டிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. வியாபரிகளிடம் சத்தமாக பேசிகொண்டிருப்பார். மண்பாண்டம் கடை ரோட்டு ஓரமாக எதிரி வைத்துள்ளார் என்றால் சரிதான். ரோட்டில் வைத்து தான் மண்பாண்டங்களை எதிரி விற்கிறார் என்று சொன்னால் சரிதான். தனியாக கடை

இல்லை. எதிரி கன்னங்குறிச்சில் குடியிருக்கறார் என்று சொன்னால் அப்போது அவரது கடைக்கு பின்பு வீடு இருந்தது. சம்பவத்திற்கு பின்னிட்டு 3 நாட்கள் கழித்து தான் செல்வகுமாரின் மனைவி அவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், வசந்தகுமாரி கேட்டுகொண்டற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.